# சென்னை மெட்ரோ ரயில் சேவை: 42 நாள்களுக்குப் பிறகு இன்று தொடக்கம்

**சென்னை, ஜூன் 20:** மெட்ரோ ரயில்சேவைக்கு தமிழக அரசு அனுமதி அளித்ததைத்தொடர்ந்து, 42 நாள்களுக்குப் பிறகு, சென்னை மெட்ரோ ரயில் சேவை திங்கள் கிழமை ( ஜூன் 21) தொடங்குகிறது. இந்த சேவை தொடக்கத்தில் காலை 6.30 மணி முதல் இரவு 9 மணிவரை இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா இரண்டாம் அலை தீவிரமாகியதை தொடர்ந்து, தமிழகத்தில் பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டது. இதையடுத்து, சென்னை மெட்ரோ ரயில் சேவை கடந்த மே 10-ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டது. தற்போது, கரோனா நோய்த்தொற்றின் தாக்கம் குறைந்து வருகிறது. இதன்காரணமாக, பொதுமுடக்கத்தில் தளர்வுகளை அதிகரித்து தமிழக அரசு ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. இதில்,மெட்ரோ ரயில் சேவைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 50 சதவீத பயணிகளுடன் சென்னை மெட்ரோ ரயில் சேவை திங்கள்கிழமை (ஜூன் 20) தொடங்குகிறது. இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

தமிழக அரசின் அறிவுறுத்தல்களின்படி, கரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்த மெட்ரோ ரயில்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். தொடக்கத்தில் காலை 6.30 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரயில் சேவைகள் இயக்கப்படும். பின்பு, தேவையின் அடிப்படையில் நேர மாற்றம் செய்யப்படும்.

விமான நிலைய மெட்ரோ நிலையம் -விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையம் இடையேவும், பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையம்-சென்னை சென்ட்ரல் மெட்ரோ நிலையம் இடையேவும் திங்கள்கிழமை முதல் நெரிசல்மிகுந்த நேரங்களில்( பீக் அவர்ஸ்) காலை 9 மணி முதல் காலை 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் முதல் இரவு 7 மணி வரை 5 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும்.

பயணிகள் பாதுகாப்புக்காக, அனைத்து மெட்ரோ ரயில்நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்கள் அடிக்கடி கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது. மெட்ரோ ரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனிமனித இடைவெளியே கண்காணிப்பதற்காக தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நடைமேடையில் காத்திருக்கும் போதும், ரயிலில் பயணிக்கும் போதும் பயணிகள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பதுடன் சமூக இடைவெளியே பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அனைத்து நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும் மற்றும் காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்த 'எக்ஸ்' குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்த குறியீடுகளை பின்பற்றமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். பயணிகள் அனைவரும் கரோனா தடுப்பு விதிமுறைகளை சரியாக பின்பற்ற வேண்டும் என்றனர்.